**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

## பிரிவு – 1

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. நீதிநூல் திரட்டு என்னும் நூலை எழுதியவர் யார்?
2. நடுகல் என்பது என்ன?
3. கிழவி என்று மணி யாரைக் குறிப்பிட்டான்?
4. காவிரியாறு தோன்றும் மலை எது?
5. சென்னையில் வானூர்தி நிலையம் எங்குள்ளது?
6. வெற்றிப்பெற வேண்டுமானால் செய்ய வேண்டியது யாது?
7. பஞ்சமூலம் என்பதன் பொருள் யாது?
8. வடக்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
9. குறிஞ்சி நிலத்திற்குரிய நிலம் யாது?
10. விடை எத்தனை வகைப்படும்?

## பிரிவு – 2

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. நான்மணிக்கடிகை குறிப்பு வரைக.
2. 'சுதந்திர தேவியை மறவேன்' என பாரதியார் கூறும் செய்தி யாது?
3. வேலி ஏன்? காவல் ஏன்? விளக்குக.
4. ஐம்பூதங்கள் யாவை?
5. வெ. இராமலிங்கனார் இயற்றிய நூல்கள் யாவை?
6. உயிர் வாழ்கின்றவர்; உயிர் வாழாதவர் யாவர்?
7. கண், கால் இவற்றுக்கு வனப்பாவன யாவை?
8. பிளந்த பனங்கிழங்கு எதற்கு உவமையாகக் கூறப் பெற்றுள்ளது?
9. மணி போன்ற மாணவர்களை எவ்வாறு உருவாக்க வேண்டும்?
10. மாத்திரை என்றால் என்ன?
11. வேற்றுமை என்றால் என்ன?
12. தமிழின் தனிச்சிறப்பு என்ன?

13. செய்யுளை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டுவன யாவை?
14. முற்று எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. புணர்ச்சி என்றால் என்ன?

## பிரிவு – 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. இளங்கோவடிகள் குறிப்பு வரைக.
2. 'சினம் விடுக' – என நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. கலம்பகம் என்றால் என்ன?
4. புகழ் என்னும் அதிகாரத்தில் உள்ள ஏதேனும் ஒரு குறளை விளக்கி வரைக.
5. காவிரியாற்றின் பிறப்பு பற்றி எழுதுக.
6. சொல்லின் இரு பிரிவுகளையும் அதன் வகைச் சொற்களையும் எழுதுக.
7. அணி என்றால் என்ன? பிறிதுமொழிதலணியை விளக்குக.
8. குற்றாலம் – குறிப்பு வரைக.

## பிரிவு – 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. நடுவுநிலைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைக் கூறுக.
2. வான ஊர்தி பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.
3. பகுபத உறுப்புகளை விளக்குக.

## பிரிவு – 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. மணி கண்ட கனவைத் தொகுத்தெழுதுக.
2. ஐவகை தொகைநிலைத் தொடர்களை விளக்குக.